RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1848

# திணைக் கோட்பாட்டு அணுகுமுறையில் குறிஞ்சி முல்லைப் பாலைப் பாடல்களில் திணை உணர்வும் தன்னுணர்வும்

**ச. அவ்வை** [அ, *]

[அ] தமிழ் உயராய்வு மையம், பச்சையப்பன் கல்லூரி, சென்னை-60003, தமிழ்நாடு, இந்தியா.

# A Theoretical Approach to the Poetry Songs of Kurinji Mullai and Palai's

**S. Avvai** [a, *]

[a] Tamil Research Centre, Pachaiyappa's College, Chennai-600030, Tamil Nadu, India

* Corresponding Author: kknptamavvai@psbbschools.edu.in

Received: 18-07-2022
Revised: 19-09-2022
Accepted: 03-10-2022
Published: 08-12-2022

**ABSTRACT**

There has been a tradition of poetic composition in Tamil literature. In Tholkaapiyam, archeology is a theoretical formulation of poetry. A deep foundation for such theoretical formulation was developed long before the Sangam literature. Palanthamil literature pre to Sangam literature, is written by Tamil authors. The tradition of poetry found till today is the only proof for Palanthamil literature. Such an extensive Palanthamil literature was theorized by later generations. The theory has been followed by the upcoming writers by making slight changes. Sangam literature is the proof for this. This theory which explains the Tamil literature is known as the Thinai Theory.

**Keywords:** Poetry Songs, Kurinji, Mullai, Palai's, Sangam Literature

## முன்னுரை

தமிழர்தம் இலக்கிய மரபில் தேர்ந்த கவிதை ஆக்க நெறி இருந்துள்ளது. கவிதை குறித்த கோட்பாட்டு உருவாக்கமாகவே தொல்காப்பிய பொருளதிகாரம் அமைந்துள்ளது. இத்தகைய கோட்பாட்டு உருவாக்கத்திற்கான ஆழ்ந்த அடித்தளம் சங்க இலக்கியங்களுக்கு வெகு முன்பாகவே உருவாக்கப்பட்டுவிட்டது. சங்க இலக்கியத்திற்கு முந்தைய பழந்தமிழ் இலக்கியம் பரந்து விரிந்த நிலையில் தமிழ்ச் சான்றோரால் படைக்கப்பட்டுள்ளது. இன்று வரை காணப்படும் கவிதையின் மரபு நீட்சியே இதற்குச் சான்றாக அமைகிறது. அத்தகைய விரிந்த இலக்கிய புலமை பிற்காலத்தவரால் கோட்பாட்டு உருவாக்கம் பெற்றது. இக்கோட்பாடு அதற்குப் பிற்பட்டோரால் அப்படியே பின்பற்றப்பட்டும் சில மாற்றங்கள் செய்தும் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. தற்போது கிடைக்கும் சங்க இலக்கியங்கள் இதற்குச் சான்றுகளாக அமைகின்றன. தமிழரின் இலக்கியப் புலமையை விளக்கும் இக்கோட்பாடு திணைக் கோட்பாடு என அறியப்படுகிறது.

## திணை

கவிதை ஆக்கத்தில் முதல், கரு, உரி என்ற கருத்துருக்களின் கூட்டு இயக்கத்தைத் திணை எனச் சுட்டுகிறது தொல்காப்பியம். இதைத் தமிழர்களின் ஆதி சிந்தனை முறையாகக் கருத இடம் உள்ளது. இச்சிந்தனை கவிதை படைப்பிற்கான ஆக்கநெறியாக தோற்றம் பெற்றிருக்கலாம். அல்லது ஆதிகாலசிந்தனை முறையே கவிதை வடிவில் இருந்தமையால் திணை நெறி உருவாக்கம் இயல்பாக நிகழ்ந்திருக்கலாம். ஆயினும் நமக்கு கிடைக்கும் திணைகுறித்த அடிப்படை ஆவணமாகிய

தொல்காப்பியத்தின் அடிப்படையில் பார்த்தால் கவிதை ஆக்கம் குறித்த ஒரு சிந்தனை என கொள்வதே பொருத்தமாக இருக்கும்.

திணை என்பது அடிப்படையில் நிலம், நிலத்துள் வாழும் மக்கள் குழுமம் அவர்களது ஒழுக்கம் என்ற கருத்தினையே தரும். திணை என்பது பொதுப்படையாக ஒழுகலாற்றைக் குறிக்கின்ற ஒரு சொல்லாக இருக்கின்றது (Kaarthikesu Sivathambi, 2007).

தற்காலம் வரை நிலம், மக்கள், ஒழுக்கம் ஆகிய இம்மூன்று பொருட்களும் திணை என்ற சொல்லுக்குப் பொருளாகக் கொள்ளப்படுகின்றன. திணைக் கோட்பாட்டில் இடம்பெறும் முதல், கரு, உரி ஆகிய முப் பொருட்களையும் புலவர்கள் தங்களது திணை குறித்த மரபான அறிவுடன் தத்தமது தன்னுணர்வையும் இணைத்து பல புதிய வெளிப்பாடுகள் கொண்ட பாடல்களை இயற்றியுள்ளனர். நிலம், பொழுது, கருப்பொருள், உரிப்பொருள் என தனித்தனியே இலக்கணம் சொல்லப்பட்டாலும், பாடல்களில் இவை ஒரு உடலின் உறுப்புகள் போன்று உணர்வுப் பூர்வமாக பிணைக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## திணை உணர்வும் தன்னுணர்வும்

திணை உணர்வு என்பது ஒரு திணையில் பாடப்படும் உணர்வு எனக் கொள்கிறோம். அதாவது அத்திணையின் உரிப் பொருள் சுட்டும் உணர்வு ஆகும். தன் உணர்வு என்பது ஒரு குறிப்பிட்ட திணை உணர்வைப் பாட வந்த கவிஞனின் உணர்வு எனக் கொள்கிறோம். ஐங்குறுநூற்றுப் பாடல்கள் மற்றும் கலித்தொகை பாடல்களில் தொல்காப்பியம் சுட்டும் உணர்வுகள் வெளிப்படவில்லை. கலித்தொகை முல்லைப் பாடல்களில் இருத்தல் உணர்வு காணப்படவில்லை. இது போல் பிற சங்கப்பாடல்கள் சிலவும் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. பல சங்கப் பாக்களில் ஒரே உணர்வு மீண்டும் மீண்டும் இடம் பெற்றுள்ளது. அப்பாடல்களுள் முதல் கரு அடிப்டையில் நுண்ணிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. தொகுப்பு முறைமை கொண்ட ஐங்குறுநூறு, கலித் தொகைப் பாடல்களைக் காட்டிலும் பிற தொகுப்புகளுக்குள் காணப்படும் பாடல்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மை மிக்கவையாக காணப்படுகின்றன. இது கவிஞர்களின் தனித்துவம் மிக்க தன்னுணர்வுகளின் வெளிப்பாடு ஆகும்.

## கூற்று

கூற்று என்பதைப் பாடலின் கோணம் எனச் சுருக்கமாக புரிந்து கொள்ளலாம். அதாவது பாட எடுத்துக் கொண்ட பொருளை எந்த கோணத்திலிருந்து எந்த பாத்திரத்தின் வழியாகப் பேசுவது என்னும் முறையே இது. சங்கப் பாடல்களை இந்த திணைக் கோட்பாட்டின் உறுப்புகளில் ஒன்றாகிய கூற்றின் அடிப்படையில் புரிந்து கொள்ள முயல்வது பாடல்களின் ஆழத்தை அறிய எளிமையாகிறது. இந்த நிலத்தில் இந்த பாத்திரம் பேச வேண்டும் என தொல்காப்பியம் வரையறுக்கவில்லை. ஆனால் பாத்திரங்கள் எவற்றைப் பேச வேண்டும் என்று வரையறுத்துள்ளது.

ஒரு இலக்கியத்தில் இந்தப் பாத்திரம் இதைப் பேசினால்தான் படிப்போர்க்கு சுவை உண்டாக்கும் என்பதற்காக மட்டும் வரையறுக்கப்பட்டவை அல்ல கூற்றுகள். இலக்கியத்தோடு அதைப் படிப்போர் ஒன்ற வேண்டுமானால் அதில் நம்பகத் தன்மை இருக்க வேண்டும். அந்த நம்பகத் தன்மையைத் தரும் முயற்சிகளில் ஒன்று கூற்றுகள். கூற்றுகளின் வரையறைகளைக் கடந்தும் ஒரு சில பாத்திரங்கள் கூற்று நிகழ்த்தக்கூடும். அது திணை மயக்கத்தைப் போலவே அந்தந்த புலவரின் தன்னுணர்வின் வெளிப்பாடாக அமைகிறது.

## குறிஞ்சி, முல்லை - திணைஅடிப்படை

குறிஞ்சி மக்களின் வாழ்க்கைத் தேவை எளிமையானதாகவும் தங்கள் இருப்பிடப் பரப்பிற்குள்ளே கிடைப்பதாகவும் உள்ளது. புணர்தலோடு தொடர்புடைய இன்ன பிற நிகழ்வுகளும் புணர்தல் நிமித்தமாக கொள்ளலாம் என்கிறது தொல்காப்பியம். இதற்குப் பின்வரும் பாடல் ஒன்று சான்றாக அமைகிறது.

"புணரின், புணருமார் எழிலே; பிரியின்

மணி மிடை பொன்னின் மாமை சாய, என்

அணி நலம் சிதைக்கும் பசலை" (Balasubramanian, 2007).

தலைவனுடன் இருக்கும் போது இன்பமாகவும் அவனைப் பிரிந்ததும் துன்பமாகவும் இருப்பதாக கூறுகிறாள் தலைவி. புணர்ச்சி உணர்வுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இப்பாடல் அமைகிறது.

ஆனால் எல்லா பாடல்களிலும் இதை வரையறுப்பது எளிதானதாக இல்லை. புணர்தலோடு தொடர்புடைய செயல்பாடுகளில் சில இடங்களில் இருத்தலோடும், இரங்கலோடும், பிரிவோடும் தொடர்புடையனவாகவும் இருப்பதைக் காணமுடிகிறது. திணை அறிதலில் தற்கால ஆராய்ச்சியாளர் கூறும் உரிப் பொருள் அடிப்படையிலான திணைப் பகுப்புப் பார்வையும் குழப்பத்தை விளைவிக்கிறது. இருப்பினும் பின்வரும் பொதுவான கருத்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

உரிப் பொருளாகிய ஒழுக்கம் நிகழுதற்கு முதற் பொருள் நிலைக்களமாகவும் கருப் பொருள் அதற்கு உதவுமாறும் செய்யுட்கள் செய்யப்பட்டன. (Narayana Velupillai, 2000).

ஒரு நாட்டின் பொருளாதார அடிப்படையே அந்நாட்டின் எல்லா வித செயல்பாடுகளுக்கும் அடிப்படையாய் அமைகிறது. குறிஞ்சித் திணை வாழ்வில் குறிஞ்சி பொருளாதார நிலையான வேட்டை மற்றும் சிறு அளவிலான விவசாய நிலைகளுக்கு ஏற்ப அதன் உரிப் பொருள் சுட்டப்பெற்றுள்ளது. அதே போன்று முல்லை திணையின் உரிப் பொருட்களும் அமைகின்றன. பொருளாதார நடவடிக்கையைச் சுற்றியே திணைகளின் கட்டுமானம் அமைந்துள்ளது என்பதையே சங்கப்பாடல்கள் உறுதிப்படுத்துகின்றன.

"தினை உண் கேழல் இரிய புனவன்

சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடாஅர்" (Balasubramanian, 2007)

பயிர்களை நாசம் செய்யும் பன்றியைக் கொல்ல வைத்த அடார் என்ற கருவியில் புலி மாட்டி இறந்து போகும் இத்தகைய மலைக்குரிய நாடன் என தோழி தலைவனைக் கூறுகிறாள். இந்நிகழ்வின் மூலம் தலைமக்களின் களவு சிக்கலுக்கு உள்ளான விதத்தை இவ்வரிகள் சுட்டுகின்றன. இது போல் பல பாடல்களில் முதற் பொருளும், கருப் பொருளும் உரிப் பொருளுக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

குறிஞ்சியில் மனைக்கு அருகே உள்ள இடமும், முல்லை நிலங்களின் முல்லைக் கொடிகள் இருக்கும் இடங்களும் காதலர் சந்திக்கும் இடங்களாக இருக்கின்றன. இணைந்திருக்கும் காதலர்களுக்காகவும், பிரிந்திருக்கும் காதலர்களுக்காகவும் என தனித்தனி உணர்வுகளும், இடங்களும், கால நிலைகளும், பின்னணிப் பறவை மற்றும் விலங்குத் தொகுதிகளையும் சிறப்பான முறையில் சங்கச் சான்றோர் பயன்படுத்தியுள்ளனர்.

குறிஞ்சி, முல்லை திணைப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள முதற் பொருட்களும் கருப் பொருட்களும் உரிப் பொருட்களைச் சிறப்பாக விளக்கும் பொருட்டே பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்குப் புலவர் தம் நில அறிவும் சூழல் அறிவும் பெரிதும் பயன்பட்டிருக்கிறது என்பதற்கும் சங்கப் பாடல்கள் சான்றுகளாக அமைகின்றன.

## கவிதையின் உயிர்

கவிதையின் உயிர் என்பது வடிவமற்ற உரிப் பொருள். எனினும் அதை வெறும் வார்த்தைகளில் வடிவமின்றி விவரிக்க முடியாது. அதற்கு ஒரு கட்டமைப்பை உருவாக்கி அதனுள் அவ்வுரிப் பொருளை வைத்துக் கூறும் போது உரிப் பொருள் துலக்கம் பெறுகிறது. அதனால் முதல், கருப் பொருட்களும் உணர்வு பெறுகின்றன. இந்த உணர்வை இவற்றால்தான் தோற்றுவிக்க முடியும் என்ற உணர்வுந்துதல் கொண்ட சமூகமாகப் பண்டைத் தமிழ் சமூகம் இருந்துள்ளது புலனாகிறது.

அந்தந்த உரிப் பொருளுக்கென்று வகுக்கப்பட்ட முதல் பொருள் மற்றும் கருப் பொருளுடன் இணைக்கப்பட்டு பெரும்பான்மையான சங்கப்பாடல்கள் இயற்றப் பட்டுள்ளன. தாங்கள் உருவாக்கிய ஒரு பொருள் பொதிந்த சிந்தனை கட்டமைப்பை தமிழ் மக்கள் எங்ஙனம் ஒத்திசைவோடு பல தலைமுறை கடத்தி வளர்த்துள்ளனர் என்பது புலப்படுகிறது. மேலும் இது எழுதி வைக்கப்பட்ட சட்டமாக இல்லாமல் தேவையான பொழுது மாற்றிக் கொள்ளக் கூடிய திணை மயக்கம் என்ற விதிவிலக்கும் கைகொள்ளப்பட்டு வந்துள்ளதையும் காணமுடிகிறது.

## முதற் பொருள்

திணைப் பகுப்பில் முதற் பொருளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற தமிழரின் சிறப்பான சிந்தனை மரபு இயற்கை, மனிதன், கவிதை ஆகியவற்றின் ஒரு ஒத்திசைவை வலியுறுத்துகிறது. முதற் பொருளின் வழியே அந்தத் திணைப் பாடல்கள் சரியான மற்றும் உணர்பூர்வமான உரையாடலைப் படிப்போர் அல்லது கேட்போரிடம் நிகழ்த்துகிறது. பொழுதாகிய முதற் பொருளுக்குத் தமிழ்ச் சான்றோர் அளித்துள்ள இடத்தைப் பின்வரும் கூற்று புலப்படுத்துகிறது.

ஆறு பெரும் பருவங்களில் கார் (மழைக்காலம்), முதுவேனில் (கடுங்கோடை) ஆகிய இரண்டிலும் தமிழ்க்கவிஞர்கள் மிகுதியாக கவனம் செலுத்தியது போலத் தோன்றுகிறது. (Balasubramanian, 2007)

திணை என்ற கூட்டைம்பு சங்கக் கவிதைகளின் உணர்வு செழுமைக்கு அடிப்படையாய் இருந்துள்ளதற்கு பொழுதின் தன்மையைச் சான்றாக கூறி விளக்குகிறார் தனிநாயக அடிகள். தலைமக்களின் காதல் வாழ்வு சங்கப்பாடல்களின் பொருண்மை என்றாலும், அதில் ஒரு உலகம் தழுவிய கலாச்சார கட்டுமானம் மற்றும் உணர்வுச் செழுமை இருப்பதையும் காண முடிகிறது. அந்த வகையில் பெரும்பான்மையான குறிஞ்சி முல்லைப் பாடல்கள் புலவர் தம் தன்னுணர்வோடு திணை உணர்வும் இணைந்து சிறப்பான முறையில் வெளிப்பட்டுள்ளன.

### பாலை

பாலையின் திணை உணர்வு பிரிதல் ஆகும். பிரிதல் நானிலத்துக்கும் உரியதாயினும் குறிப்பாக பாலைத் திணைக்குச் சுட்டப்பட்டதற்குக் காரணம் வருடத்தில் ஒரு முறை வரும் கோடை காலத்திலும் துன்பத்தைக் கருதாது பிரிவு நடைபெறுகிறது. தலைமக்கள் பிரிந்து வாழ்கின்ற நிலை காணப்படுகிறது. இச்சூழலுக்கான கவிதைகளை இயற்ற பாலைத் திணை சுட்டப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் குறியீட்டு தன்மை கொண்டதாக அமைகிறது.

இக்கவிதைகளின் வழியே ஒரு சோகமான தொனி வாசகர் மனதில் இரக்கத்தை ஏற்படுத்துகிறது. வேனிற் காலத்தின் கொடுமைகள் பற்றி விரிவாக விளக்குகின்றன பாலைப் பாடல்கள். மேலும் அவற்றை தலைமக்களின் காதல் உணர்வுக்கு பின்னணியாக்கி புலவர்களின் தன்னுணர்வுகளும் வெளிப்படும் வகையில் பாடல்கள் அமையப்பெற்றுள்ளன.

பொழுதுகளும், கருப்பொருளும் பாலைப் பாடல்களில் தலைமக்களுக்கு இணையான பாத்திரங்களை வகிக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாத்திரம் போல் செயற்பட்டு பிரிவு உணர்வை சிறப்பிக்கும் வண்ணம் படைக்கப்பட்டுள்ளன. பாலை நிலத்தில் விலங்குகள் பறவைகள் செய்யும் ஒவ்வொரு செயல்பாடுகளும் மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது வெறும் செயல்களாகத் திகழும், ஆனால் அவை தலைமக்களின் உணர்வுகளோடு தொடர்புறுத்தப்படும் பொழுது பேரழகையும் உணர்வி வலியையும் வெளிப்படுத்துகின்றன.

## பொருள் வேட்கை

பாலை என்றாலே பிரிவு பாடல்களின் தொகுதி எனலாம். அதில் ஓதல், பகை, பொருள் என மூவகை பிரிவுகள் உள்ளன. இந்த மூன்று காரணிகளுக்காக தலைவன் பிரிந்தாலும், பாலைப்

பாடல்களில் முதன்மை பெறுவது பொருள்வயின் பிரிவுதான். பாலை என்றாலே பொருள் தேடும் வேட்கை எனவும் சுருக்கமாகச் சொல்லலாம்.

ஒருநாள், நீர்,

பொழுது இடைப்பட நீப்பின், வாழ்வாளோ?

ஒழிக இனி, பெரும! நின் பொருட்பிணிச் செலவே (Balasubramanian, 2004)

மேற்கண்ட வரிகளில் பொருள் பொருட்டு மேற் கொள்ளும் செலவைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ பொருட்பிணி எனச் சுட்டுகிறார். பல பாடல்களில் சங்கச் சான்றோர் பொருள் வேட்கையை, பொருட்பிணி எனச் சுட்டுகின்றனர். இதன் மூலம் பொருள் வேட்கை கடியப்பட்ட பாடல்களையும், பெரும்பான்மையான இடங்களில் பொருள் வேட்கையை வற்புறுத்தும் பாடல்களையும் காணமுடிகிறது. சில பாடல்கள் எந்தப் பக்கமும் சாராமல் பொருள் வேண்டும் என்றும், வேண்டாம் என்றும் கூறாமல் தலைவன் பிரிந்தால் தலைவி வருந்துவாள், அவள் வருத்தம் கொள்ளாமல் இருக்க தலைவன் உடன் இருக்க வேண்டும் என வற்புறுத்தும் பாடல்களும் அதிகம் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் பொருள் வயிற் பிரிவு பெரும்பாலும் பாலைத் திணைப் பாடல்களுக்கு அடிப்படையாக இருந்துள்ளமையை அறியலாம்.

## பாலையின் கொடுமை

கலித்தொகைப் பாடல்களில் கூறப்படும் புராணச் செய்திகள் பிற்காலத்தைச் சேர்ந்தவை எனினும் அதில் வெம்மையோடு தொடர்பு படுத்தி அத்தெய்வமும் அது சார்ந்த புராண நிகழ்வுகளும் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் பாலையின் உணர்வை விளக்க பிற்கால புலவர்கள் தங்கள் காலத்து புராணக் கதைகளைப் புகுத்தி தங்கள் தன்னுணர்வை வெளிப்படுத்தியுள்ளமையை அறியமுடிகிறது. ஆயினும் அக்கதைக்கும் அத்தலைமக்கள் தம் வாழ்விற்கும் ஒரு தொடர்பினை ஏற்படுத்தி பிரிவு உணர்வைச் சிறப்பாக வர்ணிக்கிறார் புலவர்.

வெள்ளிவீதி தன் கணவனைத் தேடுவது போல் தன் காதலனை எல்லையற்ற வெடிப்புற்ற பாலை நிலத்தில் நான் எப்படி தேடி கண்டு பிடிப்பேன் எனக் கூறுவது போல் அமைந்துள்ள பாடலில் பாலை நிலம் சிறப்பான கவனம் பெறுகிறது. இந்நில அமைப்பே அச்சமூட்டுவதாகவும் இரக்கத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. இந்தப் பின்னணியில் தலைவன் சென்றுள்ளான் என்ற நிகழ்வு தலைவிக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்ற உணர்வை வாசகர்களை உணரச் செய்ய இப்பின்னணிப் பாத்திரங்கள் பயன்படுகின்றன.

“கூற்றத் தன்ன கொலைவேல் மறவர்

ஆற்றுஇருந்து அல்கி வழங்குநர்ச் செகுத்த

படுமுடைப் பருந்து பார்த்திருக்கும்

நெடுமூதிடைய நீர்இல் ஆறே” (Avvai Duraisami Pillai, 2000)

என பாலையின் கொடுமையை மறவர், பருந்து போன்ற அச்சம் விளைவிக்கும் பாத்திரங்களைக் கொண்டு விளக்குகிறது இப்பாடல். துயரமான இப்பாலைப் பயணத்தில் தான் தலைவனுடன் சென்றிருந்தால் பிரிவுத் துயரைக் காட்டிலும் செலவுத் துயர் குறைவாக இருக்கும் என கருதும் பாலைத் தலைவியையும் சங்கப்பாடல்களில் காணமுடிகிறது. அவள் இருப்பது வசதியான வீட்டுச் சூழலில், நல்ல பராமரிப்பு சூழலில் ஆனால் தலைவன் நிலை மிகுந்த துயருடைத்து. இம்முரண்பட்ட நிலையும் பாலைப் பாடல்களுக்கு குறிப்பிடத்தக்க சோகத்தை அளிக்கின்றன.

ஒரு வேளை தலைவன் செல்லும் சுரம் அதிக வெப்பம் இல்லாமல் மழை பொழிந்து தண்மையான இடமாகக் கூட இருக்கலாம். ஆனால் தலைவியைப் பிரிந்து வந்த பிரிவுத் துயர் அவன் உள்ளத்தில் ஒரு வெம்மையையே ஏற்படுத்துகிறது. அந்த வெம்மையின் குறியீடாக பாலைத் திணை

சுட்டப்பட்டுள்ளது. தலைமக்கள் மனதில் கொள்ளும் வெம்மைக்கு இணையாக ஒரு புற உலகைப் படைத்துக் காட்டுவதில் தமிழ்ப் புலவர்கள் வல்லவர்களாக இருந்துள்ளனர்.

ஒரு பாடலில் வெம்மையான பாலை நிலத்தில் சென்று கொண்டிருக்கும் தலைவனுக்குத் தன் தலைவியின் நினைவு வருகிறது. அவளது இனிமை அவனது மனதில் பரவுகிறது. அவன் புறத் தோற்றத்தில் காணப்பட்ட வெம்மை மறைந்து அவ்விடம் அவனுக்கு தண்ணென்ற இனிமையைத் தருகிறது. இக்குறிப்புகளின் வழி மனதின் உணர்வுகளை வெளிப்படுத்தும் குறியீடாக பாலை அமைந்துள்ளதை அறியலாம்.

இப்பாடல்களைப் படிக்கும் மனிதர்கள் எக்காலத்தைச் சேர்ந்தோராக இருப்பினும் அவர்களின் உணர்வுகளில் அதிர்வலைகளை ஏற்படுத்தி தற்காலம் வரை நின்று நிலைத்து இருப்பதற்குக் காரணம் தமிழர்தம் கவிதையாக்க நெறியாக திணைக் கோட்பாட்டை வகுத்துக் கொண்டமையும் ஒரு முக்கிய காரணி என்பது மறுப்பதற்கில்லை.

## முடிவுரை

திணை மயக்கம் காரணமாக எழும் திணை அறிதல் சிக்கலுக்கு தற்கால ஆய்வாளர்கள் உரியின் அடிப்படையில் மீள் தொகுப்பு மேற்கொள்ள வேண்டும் என்று கருதுகின்றனர். திணையில் அசைக்க முடியாத தூணாக விளங்குவது நிலம் என்ற முதல் பொருளாகும். இப்பொருளின் அடிப்படையிலேயே சங்கப் பாடல்களின் இயக்கம் தொடங்குகிறது. குழப்பத்தைத் தவிர்க்க மீள் தொகுப்பு செய்யப்பட வேண்டுமானால் ஒவ்வொரு பாடலிலும் இடம் பெற்றுள்ள முதல் பொருளான நிலத்தையும் உரிப் பொருளான உணர்வுகளை இணைத்து ஒரு புது வகை திணையை உருவாக்கலாம் என இவ்வாய்வு கருதுகிறது. எடுத்துக்காட்டாக குறிஞ்சி நிலத்தில் ஊடல் உணர்வு என நிலத்துக்கும் முக்கியத்துவம் அளித்து அதே போது அப்பாடலின் உயிர் போன்ற உணர்வுக்கும் முக்கியத்துவம் அளித்து பாடலின் சுவை குன்றாமல் அணுகும் நிலையை இவ்வாய்வு முன்வைக்கிறது. இதன் மூலம் திணைவுணர்வும் பேணப்படுகிறது. புலவர் தம் தன்னுணர்வுக்கும் மதிப்பளிக்கப்படுகிறது.

## References

Avvai Duraisami Pillai, S. (2000) Kurunthogai moolamum uraiyum, Aruna Publications, Chennai, India.

Balasubramanian, K.V. (2004) Kalithogai, New Century Book House, Chennai, India

Balasubramanian, K.V. (2007) Natrinai (Moolamum Uraiyum), New Century Book House, Chennai, India.

Kaarthikesu Sivathambi, (2007) Pandaith Thamizh Samoogam, New Century Book House, Chennai, India.

Narayana Velupillai, (2000) Sanga ilakkiyam, Thirumagal Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License